

நெல்லை அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.மேயர். ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், ஆகியோர் முன்னிலையில் ”புதுமைப்பெண்திட்டத்தின் கீழ் மாணவியர்களுக்கு மாதம் ரூபாய் 1000 பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா பயிற்சி ஆட்சியர் தவலேந்து, கல்லூரிகள் மண்டலத் தலைவர் விக்டோரியா,பொறியியல் கல்லூரியின் முதல்வர் லதா, மேலப்பாளையம் மண்டல தலைவர் கதிஜா இக்லாம் பாசிலா,மாமன்ற உறுப்பினர் சகாய ஜுலியட் மேரி களக்காடு நகர்மன்ற துணை தலைவர் ராஜன்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாலமோன் டேவிட், மாநகர கிழக்கு பொறுப்பாளர் தினேஷ் ஆகியோர் உள்ளனர்.

### மூன்றாவது மொழி தேவையில்லை!

# தமிழ்நாட்டிற்கு இருமொழிக் கொள்கையே போதும்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை,செப்.29–

புதுக்கோட்டையில் உள்ள கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டு அரங்கில் ரூபாய் 20 லட்சம் செலவில் குளிர்சாதன வசதியுடன் நவீன மயமாக்கப்பட்ட ஆண், பெண் இருபாலருக்குமான தனித் தனி உடற்பயிற்சிக் கூடத்தினை மாவட்ட ஆட்சியர் அருணா தலைமையில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.எஸ்.ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்ய நாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

மேலும் இதில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்ட நிலையில் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பையில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் வீராங்கனை களுக்கும் அமைச்சர்கள் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர். இதன் பின்னர் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களைச் சந்தித்து பேசுகையில்:

நாங்கள் எந்த கட்சியையும் அபகரிக்கவில்லை அவர்கள் சுதந்திரமாக செயல்படுவதற்கும் சுதந்திரமாக பேசுவதற்கும் சட்டமன்றத்தில் முன்வரிசை யில் இடமும் தந்து அவர்களுக்குண்டான கருத்துகளை சுதந்திரமாக சொல்வதற்கு உண்டான வாய்ப்புகளையும் உருவாக்கித் தந்துள் ளோம். எங்களைப் பொறுத்தவரை நாங்கள் யாரையும் அபகரிக்க வேண்டிய அவசியம் தி.மு.க. வுக்கு அந்த நிலை இல்லை.

அ.தி.மு.க. பா.ஜ.க.வுக்கு வேண்டுமென்றால் அந்த நிலை இருக்கும். எந்த கட்சியை கபளீகரம் செய்ய வேண்டும் என்றெல்லாம் அவர்கள் நினைக்கலாம்.

எங்களைப் பொறுத்தவரை ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களை ஓரணியில் தமிழ்நாட்டில் இணைத்துள்ளோம். 2 கோடிக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளோம். அனைத்துத் தொகுதிகளிலும் 40 சதவீத வாக்குகளை கொண்டுள்ள ஒரு கட்சி இந்தியாவில் இருக்கின்றது என்றால் அது தி.மு.க. தான். தி.மு.க. கூட்டணி உடையும் என்பது எடப்பாடி பழனிச்சாமியின் பகல் கனவு. தேர்தலைக் கண்டு நாங்கள் அச்சப்பட வேண்டிய அவசியம் கிடையாது. நாங்கள் தேர்தல் களத்துக்கு தயாராகி விட்டோம். எந்த நேரத்தில் தேர்தல் வந்தாலும் அதை சந்திக்க தயாராக இருக்கும்போது நாங்கள் அச்சப்பட வேண்டிய அவசியம் கிடையாது.

**பழுத்த மரத்தில் தான் கல்லடி படும்!**

பழுத்த மரத்தில்தான் கல்லடிப் படும். ஒவ்வொருத்தரும் தி.மு.க.வை விமர்சித்தால் தான் அரசியலில் தங்களை நிலைநிறுத்தி கொள்ள முடியும் என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். தி.மு.க. கூட்டணி பலவீனம் ஆவதற்கான வாய்ப்பே கிடையாது. வெளிநாட்டு முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை நாங்கள் தாக்கல் செய்கின்றோம். எந்தெந்த முதலீட்டு களை ஈர்த்து வந்துள்ளோம் என்பதை எல்லாம் ஒவ்வொரு வெளிநாட்டு பயணம் முடிந்த பிறகும் அங்கேயே செய்தியாளர்களை சந்தித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் தெளிவு படுத்தி வந்திருக்கிறார். அதை முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி செய்யவில்லை.

**அது அவரவர் விருப்பம்!**

ஒரு கட்சியில் இருப்பவர்கள் இன்னொரு கட்சிக்குப் போகலாம் அது அவரவர்கள் விருப்பம். இதை விழுங்க பார்ப்பது என்று சொல்ல முடியாது. நாங்கள் தோழமைக் கட்சிகளை அரவணைத்து தான் செல்வோமே தவிர அவர்களை விழுங்க மாட்டோம். தற்போது ஒன்றிய அரசு ஜி.எஸ்.டி.யை குறைத்துள்ளதை 8 ஆண்டுகளுக்கு முன்பே செய்திருக்கலாமே. முன்பே இந்த பலனை பொதுமக்களுக்கு தந்திருந்தால் அவர்கள் பலனடைந்து இருப்பார்கள். அவர்களை கஷ்டப்படுத்தி பணத்தை எல்லாம் வாங்கிக் கொண்டு தற்போது நாங்கள் நன்மை தந்து இருக்கின்றோம் என்று சொன்னால் 8 ஆண்டு காலம் மக்களிடம் வாங்கிய பணத்தை எல்லாம் ஒன்றிய அரசு கொடுப்பார்களா? இதற்கு மேல் சொல்லவில்லை அவர்களே தெரிந்து கொள்ளட்டும்.

தமிழ்நாடு மாணவர்கள் இருமொழி கொள்கையைத்தான் விரும்பு கிறார்கள். இரு மொழிக் கொள்கைகள் படித்தவர்கள் தான் அகில உலக அளவில் பிரபலமான இந்தியர்களாக இருக்கிறார்கள். மும்மொழி கொள்கையை படித்துவிட்டு யாரும் இல்லை. இருமொழிக் கொள்கை போதும். நாம் படிப்பது என்ன என்று புரிந்து கொள்வதற்கு தாய்மொழியான தமிழ். அதை வெளிப்படுத்துவதற்கு ஆங்கில மொழி. இந்த இரண்டும் இருந்தால் போதும் அதற்கு மேல் மொழிகளை கற்றுக் கொள்வது அவரவர்கள் சாமர்த்தியம். அதை நாங்கள் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் தமிழ்நாடு அரசின் கொள்கை இருமொழி கொள்கைதான். இருமொழிக் கொள்கையில் படித்தவர்கள் தான் சிறந்தவர்களாக வந்திருக்கிறார்கள். பெரிய தனியார் பள்ளிகளில் படித்தவர்கள் எல்லாம் வரவில்லை. அரசு பள்ளிகளில் படித்தவர்கள் தான் வந்திருக்கிறார்கள்.

ஒன்றிய அரசு மூன்றாவது மொழியை திணிக்கிறார்கள். மூன்றாவது மொழியை கற்க வேண்டும் என்று. எங்களைப் பொறுத்தவரை மூன்றாவது மொழியை திணிக்கக் கூடாது இரு மொழி தமிழ்நாட்டிற்கு போதும் என்பதுதான் மூன்றாவது மொழி தேவை இல்லை என்பது தான் என்று தெரிவித்தார்.



நெல்லை சந்திப்பு பாளையஞ்சாலை குமாரசாமி கோவில் எதிரில் உள்ள ஆதிதிராவிட நலத்துறை சமுதாயம் நலக்கூடத்தை ரூபாய் 30 லட்சத்தில் மறுசீரமைப்பு செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி நெல்லை மேற்கு மாநகரக் கழகப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ் எம்.பி.யிடம் நேரில் சென்று கோரிக்கை மனு வழங்கினார். உடன் வேங்கை வெங்கடேஷ்,சுரேஷ் குமார்,ஷெட்டி, செந்தில்,வினோத் குமார்,அந்தோணி ராஜ்,முருகன் உள்பட பலர் உள்ளனர்.



விளாத்திகுளம் வட்டத்தில் பருவகால மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பிள்ளையார்நத்தம், வேலிடுபட்டி அதன் சுற்று வட்டார பகுதிகளிலிருந்து வைப்பாற்றில் கலக்கக்கூடிய மழைநீர் செல்வதற்கு ஏதுவாக மேட்டுப்பட்டி செல்லும் வழியில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் அருகே நீர்வழிப் பகுதியை சுத்தப்படுத்துவதற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.உடன் தங்கவேல் ராமசுப்பு மகேந்திரன் கிளைச் செயலாளர் விஜயகுமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.


# தமிழ்நாடு அனைத்து அமைப்புசாரா தொ.மு.ச. நிர்வாகிகள்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அனைத்து அமைப்புசாரா தொ.மு.ச. (பதிவு எண். 3284/CNI, பேரவை இணைப்பு எண். 1000) நிர்வாகிகள் கூட்டம் 28.08.2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்படி தமிழ்நாடு அனைத்து அமைப்பு சாரா தொ.மு.ச.நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.

**சங்க நிர்வாகிகள்**

**மாநிலத் தலைவர்** – ராஜா குப்புசாமி

**துணைத் தலைவர்கள்** – 1) நா.மலைக்கண்ணு (இராமநாதபுரம்), 2) செ.தங்கமுத்து (ஈரோடு), 3) எஸ்.தமிழ்செல்வி (நாமக்கல்), **பொதுச்செயலாளர்** – இரா.பொன்னுராம்

**துணைப் பொதுச்செயலாளர்கள்** 1) வி.மோகன் (கிருஷ்ணகிரி), 2) வி.எஸ்.மோகன் (தஞ்சாவூர்), 3) க.பிரபாகரன் (கோவை), **பொருளாளர்** – ஜெ.பழனி

**இணைச் செயலாளர்கள்** : 1) லெட்சுமி நாராயணன் (தர்மபுரி), 2) ஆர்.ரெங்கசாமி (திருப்பூர்), 3) தமிழ்ச்செல்வி ஆனந்தன் (திருச்சி), 4) பீட்டர் ரூபன்ஸ் (பொள்ளாச்சி)

**அமைப்புச் செயலாளர்கள்** – 1)த.சுமதி (சென்னை), 2) சர்புதீன் (நெல்லை) பிரச்சாரச் செயலாளர்கள் 1) சி.டிசி. துரைசாமி (கோவை), 2) அந்தோணிராஜ் (திருப்பூர்), 3) ஜெ.சுரேஷ்பாபு (சென்னை) 4)ஏ.ஏஆறுமுகம், (திருவண்ணாமலை)

**வட்டாரச் செயலாளர்கள்:** 1) சி.பாஸ்டின் அந்தோணிராஜ் (தஞ்சாவூர்), 2) எஸ்.உண்ணாமலை (அரூர்), 3) கே.சுதா (திருவள்ளூர்), 4) எம்.ஏ.ராமர் – மதுரை, 5) வெ.கலைநேசன் (வேலூர்), 6) யசோதா (கிருஷ்ணகிரி), 7) ஜாஸ்மின் (நீலகிரி), 8) பெப்சி கண்ணன் (செங்கல்பட்டு),

**மு.சண்முகம்**, Ex.MP)
பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை

# தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அனைத்து மாநகராட்சிகள் பொதுஊழியர்கள் முன்னேற்றச் சங்க (பதிவு எண். 3410/TRI, பேரவை இணைப்பு எண்.629) த்தின் மாநிலத் தலைவராகப் பொறுப்பு வகித்து வந்த திரு. வே.பாபுமாணிக்கராஜ் அவர்கள் மறைவெய்தியதையொட்டி, மாநிலத் தலைவர் பதவியில் ஏற்பட்ட காலியிடத்திற்கு சங்கத்தின் சட்டவிதிகளின்படி நிர்வாகக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, திரு. G.மணிவேலன் அச்சங்கத்தின் மாநிலத் தலைவராக நியமனம் செய்யப்படுகிறார் ஏற்கெனவே பொறுப்பிலுள்ள நிர்வாகிகள் இணைந்து பணியாற்றிட கேட்டுக் கொள்ளப்படு கிறது.

**மு.சண்முகம்**, Ex.MP)
பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை




மதுரை மாநகர் மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் அனைத்து பகுதிகளின் இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ. வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ. குழந்தைவேலு, இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தரராஜன் ஆகியோர் முன்னிலையில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. நடைபெற்ற கூட்டத்தில் சிறப்புரையாற்றிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் சின்னம்மாள், மூவேந்திரன், முகேஷ் சர்மா, அறிவுநிதி, ஜீவன் ரமேஷ் குமார், குறும்பன், சரவணன் அம்பலம், முத்து கணேஷ், ஆறுமுகம் மற்றும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### வெல்லம் வியாபாரிகள் மரியாதையாக பேசி வியாபாரம் செய்வார்கள் ஆனால்

# எடப்பாடி பழனிச்சாமி யாரையும் மதிக்காமல் பேசி வருகிறார்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் காட்டம்



அரியலூர்,செப்.29-

அரியலூர் மாவட்டம் வாரணாசி அருகே மருதை யாற்றின் குறுக்கே ரூபாய் 24,36. கோடி மதிப்பீட்டில் புதிய தடுப்பணை கட்டும் பணியை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் துவங்கி வைத்தார்.

பின்னர் முதல்வர் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களை ஒருமையில் பேசும் எடப்பாடி பழனிச்சாமி குறித்த, செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் சா.சி.சிவசங்கர்,

எடப்பாடி பழனிசாமி அவர்களுடைய தரம் அவ்வளவுதான். அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களே அவரைச் சொல்வார்கள், வெல்லம் வியாபாரி என்று. நாங்கள் அப்படிச் சொல்லக் கூடாது என்றுதான் இருந்தோம்.

வெல்லம் வியாபாரம் செய்பவர்கள் எல்லோரும் மரியாதையாக அனைவரிடத்திலும் பேசித்தான், வியாபாரம் செய்வார்கள். ஆனால், இவர் அதைக் கூடச் செய்யாமல் வந்திருப்பார் என்றுதான் தெரிகிறது. யாரையும் மதிக்கின்ற போக்கு இல்லாமல், மிகத் துச்சமாக ஒருமையில் பேசுவது என்பது தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை நாம் பார்த்திராத மிகத் தாழ்வான நிலையாகும். அந்த நிலைக்கு வந்திருக்கின்ற எடப்பாடியை மக்கள் நிச்சயமாக மன்னிக்க மாட்டார்கள். அவருக்கு வருகின்ற 2026 தேர்தலில் மக்கள் நல்ல தீர்ப்பை வழங்குவார்கள் என்று பதிலளித்து பேசினார்.

மேலும், மலைப்பகுதிகளில் பேருந்துகளுக்கு மாற்றாக, வேன் இயக்கும் முடிவைப் போல மற்ற பகுதிகளிலும் வேன் இயக்கப்படுமா? என்ற செய்தியாளரின் கேள்விக்கு...

பெரிய பேருந்துகள் இயக்கம் உடைய இடங்களில் அதற்கான மாற்று என்ன செய்யலாம் என்ற ஆய்வு நடைபெறுகிறது. அதிலே ஒரு கட்டமாக அதற்கான அறிவிப்புகள் வருகிறது. அடுத்தடுத்த கட்டங்களில் மேலும் எதிர்பார்க்கலாம் என்று பதிலளித்து சென்றார். அமைச்சர் சா.சி.சிவசங்கர்.



தி.மு.க. முன்னாள் புதுவை சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் மாநில அமைப்பாளர் மறைந்த ப. சுப்பராயன் உடலுக்கு புதுச்சேரி மாநில தி.மு.கழகம் சார்பில், அஞ்சலி செலுத்தப்பட்டது. மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா தலைமையில் திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அரியாங்குப்பம் கிராமத்தில் இருந்து ஊர்வலமாக சென்று மணவெளி இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.



தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் எம்.பி., தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் போடிநாயக்கனூர் நகராட்சி 19வது பகுதி சாலை காளியம்மன் கோவில் சாலையில் புதிய நியாய விலை கடை கட்டிடம் அமைப்பதற்கான பணி 19 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் நகரக் கழகத் துணைச் செயலாளர் எஸ்.வெங்கடேஷ் குமார், ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ராஜராஜேஸ்வரி சங்கர், புருஷோத்தமன், குணசேகரன், சரவணன், பிரபாகரன், மற்றும் 19 வது வார்டு திமுக செயலாளர், மகளிர் அணி, இளைஞர் அணி நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் துவங்கப்பட்ட உங்களுடன் ஸ்டாலின் மகத்தான திட்டத்தை பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி மேற்கு ஒன்றியம் மோசுகுடி கிராமத்தில் நடைபெற்ற முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் துவக்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் கிருஷ்ணமூர்த்தி, சமையன், சித்திரவேல், வேலாயுதம், ராஜபாண்டி, ஜெயினுலாதின் சேட், கருப்புசாமி, சவுந்தரபாண்டி, லண்டன் ராமு, பாரதிராஜா மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.